Registered as a NewsPaper
விலை ரூபா 7.00
# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் - 08
நாதம் ௧ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௩௫ | மாசி - 09 | ௨௧-௦௨-௨௦௦௪ | சனிக்கிழமை | ஓசை - 003

S.M கோல்ட் ஹவுஸ்
காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்
இல:-48A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4217
(ச-9205) 077-6059672





விடுதலைப்புலிகளின் அதிவேக உந்துருளி சிறப்பு அணியை தேசியத்தலைவர் அவர்கள் பார்வையிடுவதையும், அணியின் சாகச நிகழ்வொன்றையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

- தமிழீழ விடுதலைப்புலிகளின் -

# அதிவேக உந்துருளி சிறப்பு அணியின் பயிற்சி நிறைவில் தேசியத்தலைவர் கலந்துகொண்டு சிறப்பிப்பு

## சாகச நிகழ்வுகளையும் பார்வையிட்டார்

**விடுதலைப் புலிகளின் அதிவேக உந்துருளி சிறப்பு அணியின் பயிற்சி நிறைவு தின நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். நேற்று வன்னியில் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட இடத்தில் விடுதலைப் புலிகளின் அதிவேக உந்துருளி சிறப்பு அணியினரின் பயிற்சி நிறைவு தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. இதில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு, விசேட அணியினரின் சாகச நிகழ்வுகளையும் பார்வையிட்டார்.**

ஆரம்ப நிகழ்வாக அதிவேக உந்துருளி சிறப்பு அணியினரின் உந்துருளியுடனான அணிவகுப்பைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டதோடு, அணிகளையும் பார்வையிட்டார். இதன் போது தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், விசேட அணியின் பொறுப்பாளர் மணியரசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து அதிவேக உந்துருளி சிறப்பு அணியினரின் சாகச நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், காவல்துறை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வன்னி மாவட்டத்தில் போட்டியிட மேலும் இரு சுயேட்சைக்குழுக்கள் கட்டுப்பணம் நேற்று செலுத்தின

(வவுனியா செய்தியாளர்)

பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட மேலும் இரு முஸ்லீம் சுயேட்சைக்குழுக்கள் கட்டுப்பணங்களைச் செலுத்தியுள்ளன.

வன்னி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு நேற்று வருகை தந்த ஜனாப், கபீர் முகமட் சலீம் என்ற முதன்மை வேட்பாளர் தலைமையிலான சுயேட்சைக் குழு ஒன்றும், ஜனாப், சித்திக் அக்பர், முகமது சாலீம் என்ற முதன்மை வேட்பாளர் தலைமையிலான சுயேட்சைக்குழு ஒன்றுமே இன்று தமது கட்டுப்பணத்தை செலுத்தி வேட்பாளர் நியமனப் பத்திரத்தைப் பெற்றுள்ளன. நேற்று முன்தினம் சிறிலங்கா பூமிபுத்திரக் கட்சியும், முஸ்லிம் சுயேட்சைக்குழு ஒன்றும் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமை தெரிந்ததே. (10)

## தனிச்சிங்களத்தில் யாழ்.இற்கு தேர்தல் திணைக்கள சுற்றுநிருபம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தேர்தல் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படும் சுற்றுநிருபங்கள் யாவும் தனிச் சிங்களத்தில் அமைந்திருப்பதால் அதிலுள்ள விடயங்களை திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழ்ப் பிரதேச தேர்தல் திணைக்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் சுற்றுநிருபங்கள் இவ்வாறு தனிச் சிங்களத்தில் அமைந்திருப்பதால் அவற்றை வாசித்து அறிவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்குவதாகதெரிவிக்கும்தேர்தல் திணைக்கள அதிகாரிகள்இவ்வாறான

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் தாயகம் திருமலை மாவட்டம் என்பதை தேர்தல் மூலம் தமிழ் மக்கள் உணர்த்த வேண்டும்

### திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்

(திருகோணமலை)

தமிழர்களின் தாயகம் திருகோணமலை மாவட்டம் என்பதை எதிர்வரும் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் உணர்த்த வேண்டும் என்று விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்தார். நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பற்றி ஆராயும் கூட்டத்தில் பங்குபற்றிப் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். எதிர்வரும் பொதுத் தேர்தலை திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பூரணமான ஒற்றுமையுடன் சந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் என்ற ரீதியில் நாம் தமிழர் என்ற உணர்வுடன் பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் பலி

### - சடலம் இனங்காணப்படவில்லை

(அலுவலக செய்தியாளர்)

ஏ9வீதி 155ஆம் கட்டைப்பகுதியில்வான்-உந்துருளிஎன்பன மோதிக் கொண்டதில்உந்துருளியில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றிரவு ஏழு மணிக்கு புளியங்குளத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கையஸ் வாகனம் குறுக்கு வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்து வீதியை கடக்க முற்பட்ட இளைஞனின் மீது மோதியது.இதனால்படுகாயமடைந்த மேற்படி இளைஞன் மருத்துவ மனைக்கு எடுத்துவருகையில் இடையில் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் கிளி.பொன்னம்பலம் மருத்துவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஒத்திவைப்பு

அம்பாறை மாவட்டத்தில் 4உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் வரும் நவம்பர் மாதம் 29 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது இந்தத் தேர்தல் இன்று நடைபெறவிருந்தது கல் முனை நகர சபை உட்பட 4உள்ளூராட்சி சபைகளுக்கு இத்தேர்தல்களே நடைபெறவிருந்தன.

## திருமலை மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர் விபரம் அறிவிப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழத் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவோரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ள தாகத் 'தமிழ்நெற்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. முதன்மை வேட்பாளராக இரா.சம்பந்தன் (த.வி.கூ), எம் விக்னேஸ்வரன் (ரேனோ) துரைரட்ணசிங்கம் (த.வி.கூ), எஸ். ரகுநாதன் (ஈ.பி.ஆர்.எல்.எவ், சுரேஸ் அணி), சதா சண்முகநாதன் (அ.இ.த.காங்கிரஸ்), கௌரிமுகுந்தன் (த.வி.கூ) ஆகியோருடன் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் போட்டியிடவுள்ளதாகத் இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பில் மீண்டும்......

# எட்வின் கல்விநிலையம்

EDWIN TUITION CENTRE

முல்லைவீதி (மாவீரர் படிப்பகத்துக்கு அருகாமை) புதுக்குடியிருப்பு

அனைத்து மாணவர்களினதும் வேண்டுதலுக்கிணங்க புதிய பட்டதாரி ஆசிரியர்கள் ஒன்றிணைந்து A/L 2005, 2006ஆம் ஆண்டுகளுக்கான புதிய வர்த்தகப் பிரிவுகள் எதிர்வரும் 21.02.2004 (சனி) இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

A/L 2004ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

(சி-7163) நிர்வாகி.



# பணிநிலை வேண்டுகை

உப்பு உற்பத்தி நிறுவனத்தில் கீழ்வரும் பணிநிலை களிற்குஇருபாலாரிடமிருந்தும்வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தங்களது தன்வரலாறு அடங்கிய வேண்டுகையை 2004.02.27ஆம் நாளிற்கு முன்னதாக எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

## பணிநிலைகள்

(1) மண்வேலை தொழிலாளி (இருபாலாரும்)
(2) உப்பு வேலைத் தொழிலாளி (இருபாலாரும்)
(3) அயடின் உப்பு பொதி செய்யும் தொழிலாளர் (பெண்கள் மட்டும்)

## தகைமைகள் :-

பணிநிலை(1)ற்கு உடல் ஆரோக்கிய முள்ளவரா கவும், வேலையில்முன் அனுபவம்உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
வயது 18-55 வரை

பணிநிலை (2)ற்கு 01இல் குறிப்பிட்ட தகைமைகளுடன், உப்பளங்களில் வேலைசெய்த முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது.

பணிநிலை(3)ற்கு 01.இல் குறிப்பிட்ட தகைமைகளுடன், பொதி செய்யும் அனுபவம் இருப்பின் விரும்பத் தக்கது.
வயது 18-35 வரை
தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படும்.
உடல் உழைப்பிற்கேற்ற கவர்ச்சிகரமான சம்பள மும், ஓய்வுநேரமும் வழங்கப்படும்.

### வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி

முகாமையாளர்,
உப்பு உற்பத்தி நிறுவனம்,
பரந்தன்,
ஆனையிறவு

### நேர்முகத் தேர்வு

நாள் :- 2004.02.28
நேரம் :- காலை 10.மணி
இடம்:-உப்புஉற்பத்தி நிறுவனஅலுவலகம், பரந்தன்.

குறிப்பு :- நேர்முகத் தேர்விற்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.

(4257)


# கண்ணீர் அஞ்சலி

கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி பிரபாலினி திலக நாதன் அவர்களின் அன்புத் தாயார்.

## திருமதி கனகவதி சபாரட்ணம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடையும் இவ் வேளையில் அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்,
மாணவர்கள்,பெற்றோர்கள்,
பழையமாணவர்கள,
ஆசிரியர் நலன்புரி
சங்கத்தினர்.

(4259)


# வரிவிளம்பரம்

### பி.வி.ஆர். நகைமாடம்

1990 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு மீண்டும் முல்லைத்தீவில் அதே பழைய இடத்தில் 15.02.2004 தொடக்கம் இயங்கி வருகின்றது. என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்வுடன் அறியத்தருகின் றோம். உரிமையாளர் ஆர்.கிருஸ்ண சாமி (P.V.R.) P.V.R. நகை மாடம், முதன்மைச்சாலை, முல்லைத்தீவு. (சி-7162)


## வெளியீட்டு விழா

"மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## விபத்தில்காயம்

பூந்தோட்டம் வீதியில் நேற்று முன்தினம் வாகன விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த ஹையஸ் ஒன்றும், ஆட்டோ ஒன்றும் இவ் விபத்தில் சேதமடைந்துள்ளன. இதனால் ஆட்டோ சாரதி படுகாய மடைந்துள்ளார். (10)

## மெய்வல்லுநர் போட்டி

கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மை போட்டி நேற்று வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் இ.சந்திரராஜா தலைமையில் நடைபெற்றது. (12)

## மங்கள சமரவீர விடுதலை

கடந்த 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் சமயத்தில் ஐ.தே.கட்சி வேட்பாளர் சாகள ரத்நாயக்கவின் ஆதரவாளர்களை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து பொ.ஐ.முன்னணியின் முன்னாள் பிரதி அமைச்சர் மங்களசமரவீர விடுதலை பெற்றுள்ளார். அவருடன் அவரது பாதுகாப்பு அதிகாரிகள் 5பேரும் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

இதற்கான காரணம் தகுந்த சாட்சியங்கள் இல்லாமை எனக்கூறப்படுகின்றது.

## பொதுமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் கோமதன் படிப்பக வளாகத்தில் அண்மையில் பொதுமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது.

அடிக்கல்லினை உள்ளூராட்சி திணைக்கள தொழிநுட்ப உத்தியோகத்தர் நாட்டி வைத்தார். மாயவனூர் கிராமசேவையாளர் ஜோன் ஜெகநாதன், வட்டக்கச்சி காவல்த் துறைப் பொறுப்பாளர் சுந்தரலிங்கம், மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊரகவளர்ச்சிக் குழு, கமக்கார அமைப்பு,மாதர் சங்கம் ஆகிய வற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (12)

## ரெலிக்கொம் இன் நடவடிக்கையை புதிய நடைமுறை பாதிக்கும்

### பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

கையடக்கத் தொலை பேசிகளுக்கு உள்வரும் அழைப்புக்களுக்கு கட்டணம் அறவிடுவதில்லை என்ற புதிய நடைமுறைகளினால் சிறிலங்கா ரெலிக்கொமின் எதிர்கால நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படலாம் என தொலைத் தொடர்பு பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்புக் குழு விடுத்த அறிவித்தலை அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்று தெரிவித்துள்ளது.

இத்தகைய தீர்மானம் ஒன்றை ஆணைக்குழு மேற்கொள்வதற்கு முன்னர் இந்த விடயம் தொடர்பான சகல அம்சங்களும் ஆராயப்பட வில்லை என சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# துயர் பகிர்கின்றோம்

## சின்னத்துரை சிவசுந்தரம்

எமது கரைச்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தரான திருமதி உமா ஸ்ரீவிஷ்ணுகாந்தா அவர்களின் பாசமிகு தந்தையார் சின்னத்துரை சிவசுந்தரம் அவர்கள் 2004.02.07 அன்று காலமானதை யிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
கரைச்சி. (4256)

ஊழியர் நலன்புரிச் சங்கம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
13
□
12
□
1938



இறப்பு
22
□
01
□
2004

அமரர்

## ஐயம்பிள்ளை வேலாயுதம்

(முன்னாள் எழுவைதீவு J.P சின்னக்கிளி)


நிகழும் சுபானுவருடம் 22.01.2004 அன்று வியாழக்கிழமை கொலன்டில் இறைவனடி சேர்ந்த ஐயம்பிள்ளை வேலாயுதம் (சின்னக்கிளி) அவர்களின் நினைவஞ்சலியும் 21.02.2004. சனிக்கிழமை அன்று எமது இல்லத்தில் மதியபோசனமும் இடம் பெறும் இன் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவரின் துயர செய்தி கேட்டு எம்முடன் நேரடியாகவும் தொலைத் தொடர்பு மூலமும் ஒலி நாடா மூலமும் எம் துயரில் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல-21
வைத்தியசாலை
அருகாமை,
தருமபுரம். (4253)

தகவல்:-
மனைவி,மகள்மார்,
மருமக்கள்மார்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



நீத்தார் பெருமை
நாட்டுப் பற்றாளர்

## அமரர் பொன். விநாயக மூர்த்தி

பொன் சொரியும் பூநகரின் புதல்வா
பூத்திருந்து வாழ்ந்த நன் நாள்
நேற்றுவரை நெஞ்சத்தில் நின்றதே...
இன்று நினைவுகளும் எம் மக்கள்
மனதில் உம் நிழலுருவம் தான் -மேதினியில்
நீர் செதுக்கியவை, பதித்தவை, படிமங்களும்
தடயங்களும் வாழ... வளர....
சிறியோர் முதல் பெரியோர் வரை வாழ
சிறப்புற திட்ட மிட்ட சேவை- பிறர்
மதிப்புடன் உமது பணி மனங்களில் பட
உழைத்தீரே
பூநகரின் புதல்வா புகழ்மாலை
நீ பிறந்த மண்ணுக்கல்லவா...
தேசத்தின் புத்திரன் ஆனாயே...
உன் தேகம் இளைத்தது எதனாலே?
மண்மீது மக்கள் மீது மனங்கொண்ட
பேரன்பாலன்றோ.

"நெஞ்சிருக்கும்வரை எம் மக்கள்" மனதில் உன் நினைவிருக்கும்

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்
ப.நோ.கூ. சங்கம் பூநகரி

(4258)

# கைப்பற்றிய நகரை சுதந்திர நாடாக கெயிட்டி தீவிரவாதிகள் பிரகடனம்

(கெயிட்டி)

**கெயிட்டியின் நகர் ஒன்றை அரச படைகளுடனான கடும் சண்டையின் பின்னர் கைப்பற்றிய தீவிரவாதிகள் அதற்கு புதிய பெயரைச் சூட்டி சுதந்திர பிரகடனம் செய்துள்ளனர்.**

சனாதிபதி அரிஸ்டைட்டின் ஆதரவாளர்களும் அவரை எதிர்ப்பவர்களும் இடையில் கடந்த சில நாட்களாக கடும் சண்டை நடைபெற்றுவருகிறது.

இத் தாக்குதல் அழிவினால் கடந்த மூன்று தினங்களில் மட்டும் ஐம்பதுபேர்வரை இறந்திருக்கலாமென அறிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கெயிட்டியின் முன்னாள் இராணுவவீரர்களைக் கொண்ட குழுவினர் கெயிட்டி நகரம் ஒன்றைக் கைப்பற்றி அதற்குப் புதியதொரு பெயரையும் சூட்டி அந்தப்பகுதியில் சுதந்திரப் பிரகடனத்தையும் செய்துள்ளனர்.அரிஸ்டைட்டின் முன்னாள் ஆதரவாளர்களும் தற்போதைய பரம விரோதியுமான மிகைல் மக்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் பிரிந்திருந்த தீவிரவாதிகள் ஒன்றிணைந்துள்ளதால் தங்களுடைய பலம் அதிகிரித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் வோஷிங்டனின் நிருபர்களுக்கு உரை நிகழ்த்துகையில்.

கெயிட்டிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமேயானால் சனாதிபதி அரிஸ்டைட் பதவி விலகுவது நல்லது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை கெயிட்டிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் சமரசப் பேச்சாளர்களை அனுப்பவுள்ளன.

கெயிட்டி சனாதிபதி அரிஸ்டைட் அளித்த வாக்குறிதிகளை இயன்றளவில் அவர் நிறைவேற்ற வேண்டும் என இந்தச் சமரசப் பேச்சாளர்கள் வற்புறுத்தி உள்ளனர்.

அந்த நாட்டிற்கான புதிய பிரதமர் நியமிக்கப்படுதல்-அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படும் குழுக்களை நிராயுபாணிகளாக்குதல் ,விரிவான ஆலோசனை சபை ஒன்றை உருவாக்குதல் ஆகிய நடவடிக்கைகளை சனாதிபதி பூர்த்தி செய்வது அவசியமாகும் என்று இவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை கனடிய வெளிவிவகார அமைச்சர் வில்கிரகாம் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில்,

சமரசப் பேச்சாளர்கள் நாளை கெயிட்டி செல்வார்கள் என்றும் உடனடியாக சனாதிபதியைச் சந்திப்பார்கள் என்றும் இத்தகைய நிலைமை தொடர்ந்தும் நீடிக்க அனுமதிக்கக் கூடாது என்றும் கனடிய வெளிவிவகார அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பாராட்டு

இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையிலான சர்ச்சைகளைத் தீர்த்துக் கொள்ளும் விதத்தில் பேச்சுவார்த்தை நடத்தி வருவதையிட்டு பல்வேறு சர்வதேச அமைப்புக்களும் பாராட்டியுள்ளன.



கைப்பற்றப்பட்ட நகரில் ரோந்து சுற்றும் தீவிரவாதிகள்.

# அமெ.விசா எண்ணிக்கையை உயர்த்த பாராளுமன்றம் அனுமதி மறுப்பு

"தொழில்கல்வி பெற்றவர்கள் அமெரிக்காவில் வேலை செய்ய விரும்பினால் அவர்களுக்கு அடுத்த ஆண்டு வரை விசா கிடைக்காது" என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

தொழில்கல்வி பெற்ற வெளிநாட்டினர் அமெரிக்காவில் வேலை செய்ய வேண்டுமானால் அவர்கள் எச்-1பி விசா பெறவேண்டும். அது இருந்தால் தான் அமெரிக்கா சென்று அங்கு பணியாற்ற முடியும்.

65 ஆயிரம் 1-பி விசாக்கள் வழங்குவதற்கே பாராளுமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. அதிகரிப்பதற்கு அனுமதிமறுத்துள்ளது. இதை கடந்த 2000ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 95 ஆயிரம் என அமெரிக்கா உயர்த்தி இருந்தது. ஆனால் விசா எண்ணிக்கை உயர்வு அமுல்படுத்தப்படாமல் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இது காலாவதியாகி விட்டது.

65 ஆயிரம் பேருக்கு விசா வழங்கக் கூடிய வகையில் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே இனிமேல் விசா கோரிவரும் மனுக்களை அடுத்த ஆண்டு வரை ஏற்கப்படமாட்டாது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

2005 ஆம் ஆண்டுக்கான எச்-1பி விசா பெறுவதற்கான மனுக்கள் வருகின்ற ஏப்ரல் முதலாம் திகதி முதல் பெறப்படும். அதற்கான விசாக்கள் அக்டோபர் முதலாம் திகதி கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸ் சனாதிபதி மீது கைக்குண்டு வீச்சு மேடையில் இருந்த அதிகாரி மரணம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியா அரோயா கூட்டமொன்றில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது மேடைமீது வெடிகுண்டு எறியப்பட்டதன் காரணமாக அரச அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பலர் காயமடைந்துள்ளார்கள். சனாதிபதி காயமின்றி தப்பித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் மின்தானோ தீவின் பண்தார் நகர மண்டப மேடை மீதே குண்டு வீசப்பட்டுள்ளது.

எதிர்வரும் மேமாதம் பிலிப்பைன்ஸில் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் அங்கு வன் செயல்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகின்றது.

ஏற்கனவே பின் தானே நகரின் பிரதிமேஜர் இனம் தெரியாதவர்களால் கொலை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

# பலவித தாக்குதலை நடத்த அல்-ஹைறதா அமைப்பு முயற்சி

## அமெரிக்க புலனாய்வுத்துறை எச்சரிக்கை

ஆபத்தான இரசாயனப் பொருட்களை ஏற்றிச் செல்லும் ரயில்களைக் கவிழ்ப்பதன் மூலம் பேரழிவை ஏர் டுத்த பின்லேடனின் அல்-ஹைறதா இயக்கம் சதி செய்து வருவதாக அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை செய்துள்ளது.

2001 செப்ரெம்பர் 11 தாக்குதல போல மீண்டும் ஒரு தாக்குதலை நடத்த அல்-ஹைறதா திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கப் புலனாய்வுத்துறை எச்சரிக்கை செய்துள்ளது.

அமெரிக்க புலனாய்வுத் துறைத் தலைவர் ராபர்ட் ஹட்சிங்ஸின் அறிக்கையில் ஆபத்தான இரசாயனப் பொருட்களை ஏற்றிச் செல்லும் ரயில்களை தடம் புரளச செய்வதன் மூலம் பேரழிவை ஏற்படுத்தவும் அவர்கள் திட்டமிடடுள்ளார்கள். அணுமின் நிலையங்கள் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் மீதும் பின்லேடன் குழு குறி வைத்துள்ளது. பாதுகாப்பு மிகுந்த அரசாங்கக் கட்டடங்களை தாக்குவதை விட பாதுகாப்பு குறைவான வங்கிகள், பெரிய நிறுவனங்கள், பங்குச் சந்தைக் கட்டடங்கள் ஆகியவற்றைத் தாக்குவது எளிது என்று பின்லேடன் குழு கருதுகின்றது.

விமானங்களைக் கடத்தி தாக்குதல் நடத்துவதற்கு அந்தக் குழு முயற்சிகளை தொடராமல் இல்லை. விமானங்களைக் கடத்தும் நோக்கத்தோடு தீவிரவாதி கள் விமானங்களில் பயணம் செய்து கொண்டுதான் இருக்கின் றார்கள் என்று அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்க சமாதான நடவழக்கையாளர் இஸ்ரேல்,பலஸ்தீன அதிகாரிகளை சந்தித்தனர்

(டெல் அவிவ்)

மத்திய கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் மூன்று சமாதான நடவடிககையாளர்கள் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இதேவேளை பலஸ்தீன பிரதமமந்திரி அகமட்கூரியையும் அமைச்சர் மற்றும் இராணுவத் தளபதிகளையும் ஜெருசலேமில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் வைத்து அமெரிக்காவின் சமாதான நடவடிக்கையாளர்கள் சந்தித்துள்ளனர்.

இஸ்ரேலியப் பிரதமமந்திரி இதுதொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில;

மத்திய கிழக்குச் சம்பந்தமான அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தை தான் கைவிட்டு விடவில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்காவின் இந்தத்திட்டம் தோல்வி அடையுமேயானால் தான் தமது சொந்த சமாதானத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும்அவர் உறுதி அளித்துள்ளார்.

இதற்கிடையில் காசாப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் யூதக் குடியேற்றக்காரர்கள் சென்றுவரும் வீதியில் காணப்பட்ட இரண்டு பலஸதீன துப்பாக்கி நபர்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.



டெஹ்ரானுக்கு 700 கி.மீற்றர் தொலைவிலுள்ள நிஷாபூருக்கு அண்மையில் நடந்த ரயில் விபத்தில் காயப்பட்ட ஒருவரை தூக்கிச் செல்லும் மீட்புப் பணியாளர்கள்.



பாகிஸ்தானிலுள்ள இந்துக்களின் வழிபாட்டுத் தலங்களை தரிசிக்க வந்துள்ள இந்திய யாத்திரிகர்கள் வாகா சோதனை நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு கையசைக்கின்றனர்.

# ஈராக் பொலிஸ்நிலையம் மீதான தாக்குதலுக்கு அமெரிக்காவிடம் பயிற்சி பெற்றவர்களே பின்னணியில் -பென்டகன் குற்றச்சாட்டு

(பாக்தாத்)

ஈராக்கிய நகரமான பலூஜாவில் பொலிஸ் நிலைய மொன்று அண்மையில் பாரிய தாக்குதலுக்கு இலக்கான சம்பவத்துடன் பலூஜா நகரின் முன்னாள் முதல்வரும் அமெரிக்காவிடம் பயிற்சி பெற்ற பாதுகாப்பு படையினருமே பின்னணியி லிருந்து செயற்பட்டுள்ளனர் என அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் குற்றம் சாட்டியுள்ளது.

பொலிஸ் நிலையத்தின் மீதும் சிவில் பாதுகாப்பு அலுவலகத்தின் மீதும் கடந்த சனிக்கிழமை நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதல்களில் 27 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதுடன் 35 பேர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பென்டகன் பேச்சாளர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பலூஜா நகரின் முன்னாள் முதல்வர் மீதும் சிவில் பாதுகாப்பு வீரர்கள் மீதும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான ஈராக்கிய பாதுகாப்பு ஊழியர்களுக்கு அமெரிக்கா பயிற்சி அளித்துள்ளது.

மேற்படி தாக்குதல்களின் போது இறந்தவர்களுள் ஒருவர் முன்னாள் ஈராக்கிய இராணுவத் தளபதி ஆவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் இது தொடர்பாக தெரிவிக்கையில், திட்டமிட்டு நடததப்பட்ட தாக்குதலின் போது சிறைச்சாலையில் இருந்து அதிக எண்ணிக்கையான சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும தெரிவித்துள்ளனர்.

## எண்ணிக்கை அதிகரிப்பு

ஈரான் ரயில் விபத்தில் கொலலப்பட்டவர்களது எண்ணிக்கை 300ஐயும் தாண்டியுள்ளது. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இரசாயனப் பொருட்களை ஏற்றிச்சென்ற ரயில் விபத்திற்குள்ளான போது அவற்றில் ஏற்பட்ட தீயை அணைக்க தீ அணைப்பு வீரர்கள் கடுமையாக முயற்சித்தவேளை இரசாயனப் பொருட்கள் உள்ளடக்கிய கொள்கலன் வெடித்து தீ அணைப்பு வீரர்கள் பலியானது தெரிந்ததே.

# கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் பணியில் எலிகள்

உலக நாடுகள் பலவற்றில் கொடூர யுத்தத்தீ அணைவதும் மூள்வதுமாக இருக்கின்றது. சில நாடுகளில் யுத்தம் நிறுத்தப்பட்டிருப்பினும் அதனால் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன. யுத்த நேரத்தில் எதிரியை அழிக்கும் பல நடைமுறைகளும் சூழ்ச்சிகளும் கைக்கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்றாகமிதிவெடிகளை புதைத்து வைத்தல் அமைகிறது.

இவ்வாறு புதைக்கப்பட்டுள்ள கோடிக் கணக்கான மிதிவெடிகளை அகற்றுவதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொண்டு அகற்றப்பட்டுவரினும் மேலும் கண்டுபிடிக்கப்படாத மிதி வெடிகளும் கண்ணிவெடிகளும் பல்லாயிரம் கைவிடப்படுகின்றன.



இவற்றைக் கண்டுபிடிக்க தற்போது எலிகளின் உதவி பெறப்பட்டுள்ளது. அதாவது மொசாம்பிக்கில் ஹபுடா-ஹராரே புகையிரத சாலைக்கண்மையிலுள்ள 100ச.கி.மீற்றர் பரப்பளவு நிலத்தில் தேடுதல் நடத்த ஆபிரிக்க எலி வகையைச் சேர்ந்த மூன்று எலிகளைக் கொண்ட படை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இவ் எலிகள் அவ்வாறு புதைக்கப்பட்டுள்ள வெடி பொருட்களை மோப்பமிட்டு கண்டுபிடிக்கின்றன. எலிகளின் மூலம் வெடிபொருட்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர் பெல்ஜியத்தைச் சேர்ந்த **APOPO** நிறுவனத்தின் பர்ட் விட்ஜன்ஸ் ஆவார். இவர் இருமுறை முயற்சி செய்து பலனளிக்காத வகையில் மூன்றாவது முயற்சி வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கின்றார். அதன் பின்னர் 8நாட்களில் 22 மிதி வெடிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார். இவ்வாறு பணிக்கமர்த்தப்படும் எலிகளுக்கு ஆனைக் கொய்யாப்பழம் உணவாக வழங்கப்படுகிறது.

சூழலில் ஏற்படும் தட்பவெப்ப நிலையில் அவ்வெலிகள் மோப்பம் எடுப்பது சிறிது தவறினாலும் மோப்ப நாய்களைப் போன்றே செயலாற்றுகின்றன.

இதனால் பணம், காலம் என்பன வீணாக செலவிடப்படுவது தவிர்க்கப்படுகிறது. இது வரை 90 நாடுகளில் 100 மில்லியன் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளமை சிறந்த பயனாகும். உலகில் இதுவரை கண்ணி வெடியகற்றும் பிரிவில் ஈடுபட்டுள்ளோர் தினம் ஒன்றில் 40முதல் 55பேர்வரை உயிரிழக்கின்றனர். அத்துடன் 40ஆயிரம் மிதிவெடிகள் புதைக்கப்படுகின்றன. இவற்றைப் புராதன கருவிகள் மூலம் அகற்றுவது கடினமாகும். அத்தோடு அது பாரிய சிரமமான பணி என்றும் கருதப்படுகிறது.

அதனாலேயே மோப்ப நாய்கள் 10 வருடங்களுக்கு முன்பு ஈடுபடுத்தப்பட்டன. இதன்மூலம் கண்ணிவெடியகற்றும் பணி வேகம் ஐந்து மடங்கு அதிகரித்தது.


எனினும் கண்ணிவெடியகற்றுவோர் முழுவதும் மோப்ப நாய்களில் தங்கியிருக்க முடியாது என்பது அவர்களின் கருத்தாகும். காரணம் அவை களைப்புறுவதும் கண்பார்வை பாதிக்கப்படுவதுமாகும்.

ஆயினும் எலிகளைப் பொறுத்தவரையில் ஒரு வெடிபொருளைக் கண்டவுடன் அடுத்தது எங்கே இருக்கிறது என்பதை உடன் அறியும் ஆற்றல் அதிக நன்மையாகிறது என்பது மிதி வெடி ஆய்வாளர்களின் கருத்தாகும்.

மேலும் யுத்த அனர்த்தங்களால் சிதைந்துபோன கட்டடத் தொகுதிக்குள் வெடிபொருட்கள் இருப் பதை பரிசோதிக்கும் பணிகளில் எலிகளைப் பயன்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வெலிகள் வெடிபொருட்கள் உள்ள பிரதேசங்களையும், அற்ற பிரதேசங்களையும் இனம் காணும் பொருட்டு அவற்றுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றன.

இன்னும் ஒரு புது தகவலாக இஸ்ரேலிய நிபுணர்கள் பன்றி ஒன்றை பயிற்றுவித்து கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபடுத்த முயற்சி எடுத்துள்ளனர். இதுவரை பர்ட் விட்ஜேன்ஸினால் கம்போடியா,பொஸ்னியா, சூடான், அங்கோலா நாடுகளில் பணிகளுக்காக எலிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன.



## சூழற்தொகுதி

| இயற்கைச் சூழற்தொகுதி | செயற்கைச் சூழற்தொகுதி |
|---|---|
| 1.மனிதப் பராமரிப்பின்றி வளர்பவை. | மனிதப் பராமரிப்பில் வளர்பவை. |
| 2.சூழல் காரணிகளுடன் தாவரம் இயக்கவிசைச் சமநிலையில் காணப்படும். | இயக்கவிசைச் சமநிலையில் காணப்படாது. |
| 3.உணவுச்சங்கிலி நீண்டதாக இருக்கும். | உணவுச்சங்கிலி குறுகியதாக இருக்கும். |
| 4.மண்ணரிப்புக் குறைவு. | மண்ணரிப்பு அதிகம். |
| 5.உள்நாட்டுத் தாவர இனங்களே பொதுவாகக் காணப்படும். | புகுந்தப்பட்ட தாவர இனங்களும் காணப்படும். |
| 6.சூழல் அதிகம் மாசாக்கப்படுவதில்லை. | சூழல் மாசடையும். |
| 7.மண்வளம் விரைவில் குன்றுவதில்லை. உ+ம்: நன்னீர்க்குளம், காடு மலைச்சாரல், கடல் | மண்வளம் விரைவில் குன்றும். உ+ம்: லயம், தோட்டம் |

## குருதியின் கூறுகள்

| இயல்பு | செங்குழியம் (Erythrocyt) | வெண்குழியம் (Leukocyte) | சிறுதட்டு (Thrombocyte) |
|---|---|---|---|
| 1.வடிவம் | இரட்டைக்குழிவு | குறித்த வடிவம் அற்றது | தட்டுக்கள் போன்றது |
| 2.கரு | இல்லை | உண்டு | இல்லை |
| 3.உற்பத்தி | செவ்வென்பு மச்சை | என்புமச்சை | நிணநீர் சிறுகணு செவ்வென்பு |
| 4.தொழில் | $O_2$, $CO_2$ கடத்தும் | கிருமிகளை அழிக்கும் | குருதி உறைதல் |
| 5.நோய்கள் | குருதிசோகை | எயிட்ஸ் புற்றுநோய் (இலுக்கேமியா | குருதியுறையாநோய் (ஈமோபீலியா) |
| 6.ஆயுள் | 100-120 | 3-5 | ஒருசில நாட்கள் |

## குருதிக்கலன்கள்

| நாடி [Artery] | நாளம் [Vein] |
|---|---|
| ***அமைப்பு சார்ந்த வேறுபாடுகள்*** | |
| 1.தடித்த சுவருடையது | மெல்லிய சுவருடையது |
| 2.வால்வுகள் காணப்படுவதில்லை | வால்வுகள் காணப்படும் |
| 3.உடலின் ஆழமான பகுதியில் காணப்படும் | உடலின் மேற்பரப்பில் காணப்படும் |
| 4.மயிர்த்துளைக்குழாயில் முடிவடையும் | மயிர்த்துளைக்குழாயில் ஆரம்பிக்கும் |
| 5.செந்நிறமானவை | நீல நிறமாகத் தோன்றும் |
| ***தொழில் சார்ந்த வேறுபாடுகள்*** | |
| 1.இதயத்திலிருந்து குருதியை எடுத்துச்செல்லும். | இதயத்தைநோக்கி குருதியை கொண்டுவரும். |
| 2.ஒட்சியேற்றப்பட்ட குருதியைக் கடத்தும். விலக்கு:நுரையீரல் நாடி | ஒட்சியேற்றப்படாத குருதியைக் கடத்தும் விலக்கு: நுரையீரல் நாளம் |
| 3.உயரமுக்கத்தின் கீழ் குருதி செல்லும். | தாழ் அமுக்கத்தின் கீழ் குருதி செல்லும். |
| 4.மீளியல்புடைய சுவர் | மீளியல்பற்ற சுவர் |

## கலங்கள்

| தாவரக்கலம் (Plant Cell) | விலங்குக்கலம் (Animal cell) |
|---|---|
| கலச்சுவர் உண்டு | கலச்சுவர் இல்லை |
| பச்சையவுருமணி உண்டு | பச்சையவுருமணி இல்லை |
| பெரிய புன்வெற்றிடம் உண்டு | சிறிய புன்வெற்றிடம் உண்டு |

## சிரியா

மெடிரேனியன் கடலின் கிழக்கு விளிம்பில் அமைந்துள்ள ஒரு அரபு நாடு.1944ஆம் ஆண்டு பிரான்சிடமிருந்து சுதந்திரமடைந்தது. உலகின் முதல் எழுத்து இங்கேயே உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. 1958ஆம் ஆண்டு எகிப்துடன் சேர்ந்து ஒன்றுபட்ட அரபுக் குடியரசாக உருவானது. 1961 ஆம ஆண்டு மீண்டும் தனிநாடானது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில்.

- தலைநகர்:- டமாஸ்கஸ்
- பரப்பு:- 185000 ச.கி.மீ.
- மொழி:- அரபி, குர்திஷ், ஆர்மீனியன்
- சமயம்:- இஸ்லாம்
- நாணயம்:- சிரியன் பவுண்
- முக்கியமான உற்பத்திகள்:- பருத்தி,கோதுமை, பார்லி, பால், திராட்சை, வற்றாளைக் கிழங்கு, துணிகள், பெற்றோலிப பொருட்கள், உரம், சீமெந்து, கண்ணாடி, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், பொஸ்பேட்

## தெரிந்துகொள்ள

- மனிதனின் இரத்தத் தில் "ஈஸினோபில்" எனப்படும் வெள்ளை அணுக்கள் 1.7 சதவீதமே இருக்க வேண்டும். இந்த அளவைவிட அதிகமானால் ஒவ்வாமை விளைவுகள், இருமல், மூச்சுவிடச் சிரமம் ஆகியவை ஏற்பட வாய்ப்புண்டு என ஆய்வுகள் கூறுகின்றன. "ஈஸ்னோபில்" எனும் வெள்ளை அணுக்கள் அதிகரிப் பதற்கு ஒரு காரணம் குடலில் பூச்சிகள் இருப்பதும் ஆகும்.
- உலகிலேயே அதிக நேரம் வேலை செய்யும் மக்கள் தென் கொரியர்கள்தான் என ஆய்வுகள் கூறுகின்றன.
- "லங்விஷ்" எனும் மீன்வகை நீருக்கு வெளியே மூன்று ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடியது.
- "புலிச்சுறா" எனும் ஒரு வகைச் சுறா இருக்கின்றது. இது ஒரே சமயத்தில் 60 குட்டிகள் வரை போடும்.
- நோர்வே நாட்டின் தற்போதைய வெளிநாட்டமைச்சர் - ஜோன் பீற்றர்சன்.
- கிழக்குத் தீமோரின் சுதந்திரப் போராட்டத் தலைவராக இருந்து தற்போது அந்நாட்டின் சனாதிபதியாக பதவிவகிப்பவர் சுசானா குஸ்மாவோ.
- இலங்கையில் இலவசப் பாடப்புத்தகங்களின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1980.
- "நானும் தமிழும்" எனும் தலைப்பில் ஒரு மணி 40 நிமிட நேரம் தொடர்ச்சியாக உரையாற்றிய சாதனை படைத்த இலங்கையர் சோக்கல்லோ சண்முகம்.
- ஒ.எவ்.பி. செய்திஸ்தாபனம் பிரான்ஸ் நாட்டிற்குரியது.
- முன்பு பர்மா என்றழைக்கப்பட்ட நாட்டின் தற்போதைய பெயர் - மியான்மார்.

# 3 ஆவது தமிழீழ தேசியபெருவிளையாட்டுவிழா கிளிநொச்சியில் கோலாகலமாக நேற்று ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

மூன்றாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா நேற்று (20-02-2004 வெள்ளி) காலை 9.00 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமாகியது. ஏ-9 வீதியில் ஈழநாதம் பணிமனைக்கு முன்னால் ஆரம்பமான ஊர்வலம் கிளி.பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது.

முன்னே நாதஸ்வர, தவில்கலைஞர்கள் இசை முழங்கியபடியே செல்ல பாண்ட் வாத்தியத்தைத் தொடர்ந்து பின்னால் மேஜர் அல்பேட்,லெப்.கேணல் விக்ரர், கேணல் சங்கர், லெப்.சதா, மேஜர் திலகா, மேஜர் சோதியா, லெப் கேணல் சந்திரன், கப்டன் அன்பரசி லெப்.கேணல் புலேந்திரன் ஆகிய மாவீரர்களின் உருவப்படங்களை வீரர்கள் தாங்கி வந்தனர். தொடர்ந்து சீனடி,சிலம்படி,கொம்பு வீரர்கள் தமது திறனைக் காட்டியபடியே சென்றனர். தொடர்ந்து மட்டு. அம்பாறை,திருமலை, வவுனியா, கிளிநொச்சி, யாழ், மன்னார், முல்லை வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். இவ் ஊர்வலத்தைத் தமிழீழ காவல்துறையினர் நெறிப்படுத்தியிருந்தனர்.

ஊர்வலம் மைதானத்தைச் சுற்றி வந்ததும் மாவீரர்களின் உருவப் படங்கள் இதற்கெனச் சிறப்பாக அமைக்கப் பெற்றிருந்த மாவீரர் பந்தலுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு மாவீரர் உருவப் படங்களுக்கு ஈகச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பெற்றது.

தொடர்ந்து மைதான நிகழ்வுகள் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் ஆரம்பமாகின. பொதுச் சுடரினை கிளி.அரச அதிபர் இராசநாயகம், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை ஏற்றிவைத்தார். மாவட்டக் கொடிகளை மாவட்ட விளையாட்டு அதிகாரிகள்,பொறுப்பாளர்கள் ஏற்றிவைத்தனர். அகவணக்கத்தைத் தொடர்ந்து ஒலிம்பிக் தீபத்தை ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயார்த்தன் ஏற்றி 1958 ஆம் ஆண்டு ஆசிய ஒலிம்பிக் போட்டியில் உயரம் பாய்தலில் தங்கப்பதக்கம் பெற்ற திரு.எதிர்வீரசிங்கம்,இங்கிலாந்து மண்ணுக்குத் தமிழீழ வலைபந்தாட்ட அணியைக் கொண்டு சென்று வெற்றிக்கொடி காட்டிய ரதிகலா ஆகியோரிடம் வழங்கினார். அவர்கள் மைதானத்தைச் சுற்றி ஓடி வந்து விளையாட்டுச் சுடரினை ஏற்றிவைத்தனர். அடுத்துப் போட்டியாளர் சத்தியப் பிரமாணம்,நடுவர்கள் சத்தியப் பிரமாணம் இடம்பெற்றது.

தொடர்ந்து வரவேற்புரையினை கிராம சேவையாளர் பசுபதிப்பிள்ளை வழங்கினார். ஆசியுரையினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன் வழங்கினர். சிறப்புரையினைத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா வழங்கினார்.

இசையமைப்பாளர் இசைப்பிரியன் தலைமையில் புலிகளின் குரல் கலைஞர்கள் "தாயகமண்ணே வணக்கம்" பாடலை மேடையில் வழங்கினர். தொடர்ந்து பண்பாட்டு நிகழ்வுகள் ஏக காலத்தில் மைதானத்தில் நடைபெற்றன. குருகுலம்-காந்தி நிலைய சிறார்களின் கோலாட்டம், காவடி, கராட்டி மற்றும் பொலிகை சிவலிங்கம், பருத்தித்துறை கணேசலிங்கம் ஆகியோரின் மாணவர்களின் தீப்பந்த,கம்பு சாகஸ நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவிகளின் அபிநய நிகழ்வு, செஞ்சோலை மாணவிகளின் அபிநய நிகழ்வு மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், கடற்புலிப் போராளிகள், யாழ்.மாவட்ட ஜிம்னாஸ்ரிக் கழக மாணவர்கள் இணைந்து வழங்கிய ஜிம்னாஸ்ரிக் நிகழ்வு என்பன இடம்பெற்றன. (சோ)



மாவீரர்களின் திருவுருவப் படங்களைத் தாங்கியவாறு விளையாட்டு வீரர்கள் பிரதான வீதி வழியாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தினை நோக்கி நகர்கின்றனர்.



மங்கல விளக்கினை கிளி.அரச அதிபர் தி.இராசநாயகமும் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினியும் ஏற்றி வைக்கின்றனர்.



கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தமிழீழ தேசியக் கொடி ஏற்றி வைக்கையில்.



ஒலிம்பிக் தீபத்தினை திரு.எதிர்வீரசிங்கம்,ரதிகலா ஏற்றிவைக்கும் காட்சி.



ஆரம்ப நிகழ்வில் புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன் சிறப்புரை நிகழ்த்துகையில்.



காந்திநிலைய மாணவர்களின் காவடி நடனம்.

# ஐ.ம.சு.மு. இன் வெற்றிலைச் சின்னத்தில் தேசிய ஐக்கிய முன்னணி போட்டியிட முடிவு

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர்களான பேரியல்அஷ்ரப்பும் எம்.எச்.ஏ.எம்.கிஸ்புல்லாவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டி இடுவதென தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் அதிவுல்லா மற்றும் அன்வர்ஸ்மாயில் எம்.எச்.எம் கரீப் ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தனது பூரண ஆதரவைத் தெரிவித்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# எம்மிடம் பறிமுதல் செய்த படகுகளையும் விடுவிக்க வேண்டும்

## உண்ணாவிரதமிருக்கும் மீனவர்கள் வலியுறுத்து

தம்மிடமிருந்து இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள 08 கோடி பெறுமதியான இழுவைப்படகுகள் மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

உடல் நிலை மோசமாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் சந்தித்தபோது, அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அத்துடன் தம்மையும் தம்மிடமிருந்து பறிமுதல் செய்யப் பட்ட இழுவைப்படகுகளையும் ஒரே நேரத்தில் விடுவிக்க வேண்டும் அவ் வாறு விடுவிக்காவிட்டால் தம்மை விடுதலை செய்வதாக பிறப்பிக்கப் படுகின்ற எந்தவோர் உத்தரவையும் ஏற்கப்போவதில்லை எனவும் தெரிவித்தனர். (33)

# வீரர்கள் தெரிவு

மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களில் இருந்து பெருவிளையாட்டுப்போட்டிக்கான வீரர்கள் கடந்தவாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் பாலிநகர், பாண்டியன் குளம், கரும்புள்ளியன், நட்டாங்கண்டல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கழக வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (24)

# மானிப்பாய் பரிஸ் அணி 2 விக்கெட்டால் வெற்றி

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணிக்கும், யாழ். மானிப்பாய் பரிஸ் அணிக்கும் இடையிலான 30 ஓவர் கொண்ட கிரிக்கெட்போட்டியில் பாரிஸ் அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. கடந்த புதன் கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணி 30 ஓவர் நிறைவில் 7 விக்கட் இழப்பிற்கு 141 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மானிப்பாய் பரிஸ் கழக அணி 25.2 ஓவர்களில் 8 விக்கட்டுகளை இழந்து வெற்றியிலக்கை எட்டியது.

இப்போட்டியில் நடுவர்களாக சுபாநந்,லிங்கன் ஆகியோர் கடமையாற்றினர்.

# தொலைபேசி வசதியின்றி இயங்கும் குடாநாட்டு தபாலகங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல தபால் நிலையங்கள், தொலைபேசி வசதிகள் அற்று இயங்கி வருகின்றன. இதனால் மக்களுக்குரிய துரித சேவைகளை வழங்கமுடியாதுள்ளதாக அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ்.மாவட்டத்தில் ஒரு பிரதம தலைமைத் தபாலகமும், 24 முதலாம் தரத்தபாலகமும், 26 இரண்டாம் தரத்தபாலகங்களும்,147 உப தபாலகங்களும் இயங்கி வருகின்ற போதும், இவற்றுள் சிலவற்றுக்கு மட்டுமே தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத் தபால் நிலையங்களுக்கான தொலைபேசி இணைப்புக்களை மேற்கொள்வதற்குரிய நிதிவசதி உரிய தபால் தொலைத்தொடர்பு அமைச்சினால் வழங்கப்படாமையே காரணம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (33)

# கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்வரும் மாதங்களில் உலருணவு விநியோகம் மேற்கொள்ளத் தேவையான பின்வரும் அரிசியினை வழங்கக்கூடிய பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் இருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| மாதம் | நாட்டுப்புழுங்கல் அரிசி | தீட்டல் பச்சை அரிசி |
|---|---|---|
| 2004 ஏப்ரல் | 580 மெ.தொன் | 225 மெ.தொன் |
| 2004 மே | 580 மெ.தொன் | 225 மெ.தொன் |
| 2004 யூன் | 580 மெ.தொன் | 225 மெ.தொன் |

இதற்கான கேள்விப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் இச் செயலகத்தில் 2004.02.28ந் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**தி. இராசநாயகம்,**
அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8800)

# றுகுணு ஜனதா கட்சி யாழ்.இல் வேட்புமனு தாக்கல்

யாழ்ப்பாணத்தில் முதலாவது வேட்புமனுவை சிங்களக் கட்சி ஒன்று முதலில் தாக்கல் செய்துள்ளது.

றுகுணு ஜனதா கட்சி என்ற அமைப்பே நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் இயங்கி வருகின்ற தேர்தல் திணைக் களத்தில் பதிவு செய்துள்ளதாக் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (33)

# பணிநிலை வேண்டுகை

ஆயம்,
தமிழீழம்.
18.02.2004

**ஆயப்பகுதியிற் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.**

**பணிநிலை :-** ஆய உதவியாளர் (ஆண்/பெண்)

**தகைமை :-** சாதாரணதரப்பரீட்சையிற் குறைந்தது 04பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:-** 3080-4180+2000 / 10x110

**காலம் :-** 2004.02.25 காலை 10.00 மணி.

**இடம் :-** நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி.

**குறிப்பு :-** முன்பு நேரடியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களும் சமுகமளிக்கவும்.

(சி-9096)

# 31ம் நாள் நினைவு கூரல்



## அமரர் பொன் விநாயகமூர்த்தி

எமது பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக நீண்ட காலம் கடமைபுரிந்து பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் சிறப்பாக க.பொ.த.உயர்தர வகுப்பு ஆரம்பிக்கவும் உழைத்த உத்தமனுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கிளி/கிளிநொச்சி ம.வி.
கிளிநொச்சி.

(சி-8796)

## நியாப் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 2003ஆம் ஆண்டு பயன்பெறவுள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்காரர் அமைப்பிற்கான அறிவுறுத்தல்

**விடயம்:- ஜீவனோபாய ஆதாரச் செயற்திட்டக் கொடுப்பனவுகளும், நியாப் திட்டவேலைகளை துரிதப்படுத்துவதற்குமான கூட்டம்**

1. 2001, 2002 ஆண்டுகளுக்கான மையக் கிராமங்களில் மார்ச் மாதத்திற்குள் மீளளிப்பு 80 % ஆக இருத்தல் வேண்டும்.
2. புதிய பயனாளிகளுக்கான கையேடுகள் வழங்கப்படவுள்ளன.
3. உதவி அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்படவுள்ள முதலாவது கடனுதவி தொகை, மீளளிப்புத் தொடங்கும் திகதி, மாதாந்த மீளளிப்புத் தொகை போன்ற விபரங்கள் கையேட்டில் பதியப்பட்டு பிரதித் திட்டப்பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே இரண்டாவது தொகுதி கடன் வழங்கப்படும்.
4. கடன் பெற்ற ஒவ்வொருவரும் முதல் மாதத்தில் இருந்து மாதாந்தம் ரூ.100ஐ சேமிப்பில் இடவேண்டும். அவ்விபரம் பதியப்பட்டகையேடு மாதாந்தம் பிரதித் திட்டப்பணிப்பாளரது சிபார்சிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
5. பிரதித் திட்டப்பணிப்பாளரின் சிபார்சின் பின்னரே இரண்டாவது தொகுதி கடன் வழங்கப்படும்.

எனவே பயனாளிகள், அமுல்படுத்தும் முகவர்கள், துறைசார்ந்த அலுவலர்கள் அனைவரும் கீழ்வரும் பட்டியலின்படி குறிப்பிட்ட நேரத்திற்கு கூட்டத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

| இல. | திகதி | நேரம் | இலக்குக் கிராமம் | கலந்துரையாடல் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | 23.02.2004 | 9.30 | மாயவனூர் | முன்பள்ளி |
| 2. | 23.02.2004 | 1.00 | சிவிக்சென்ரர் | முகமட் முன்பள்ளி |
| 3. | 23.02.2004 | 3.00 | மலையாளபுரம் | கிராமஅபிவிருத்திச் சங்க மண்டபம் |
| 4. | 24.02.2004 | 9.00 | நீவில் | முதலுதவி சிகிச்சை நிலையம் |
| 5. | 24.02.2004 | 1.00 | கனகபுரம் | பொதுக்காணி |
| 6. | 24.02.2004 | 3.00 | கனகாம்பிகை | முருகன் கோவிலடி |
| 7. | 25.02.2004 | 11.00 | திக்காய் | முன்பள்ளி |
| 8. | 25.02.2004 | 2.30 | குஞ்சுக்குளம் | பாடசாலை |
| 9. | 26.02.2004 | 10.00 | பிரமந்தனாறு | பாடசாலை |
| 10. | 26.02.2004 | 1.00 | உழவனூர் | முன்பள்ளி |
| 11. | 26.02.2004 | 3.00 | ஊரியான் | முருகானந்தா மகாவித்தியாலயம் |
| 12. | 27.02.2004 | 10.00 | ஜெயபுரம் தெற்கு | உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் |
| 13. | 27.02.2004 | 1.00 | ஜெயபுரம் வடக்கு | உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் |
| 14. | 27.02.2004 | 3.00 | சோலை | இல.03, பாடசாலை |
| 15. | 27.02.2004 | 5.00 | கரியாலை நாகபடுவான் | இல.02 பாடசாலை |
| 16. | 28.02.2004 | 9.30 | முகாவில் | கிராமஅபிவிருத்திச் சங்க மண்டபம் |
| 17. | 01.03.2004 | 10.00 | நேரடம்பன் | பொதுக்காணி |
| 18. | 01.03.2004 | 1.00 | சாமிப்புலம் | பொதுமண்டபம் |
| 19. | 01.03.2004 | 3.00 | செல்லியாதீவு | பாடசாலை |

மேற்படி கூட்டத்திற்கு வரும்போது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது வங்கி கணக்குப் புத்தகங்களுடன், தலைவர், செயலாளர், பொருளாளர் தவறாது கலந்து கொள்ளவும்.
இக்கூட்டம் மிகமுக்கியமானது என்பதால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**பிரதித் திட்டப் பணிப்பாளர்,**
**நியாப், கிளிநொச்சி.**

(சி-8798)



## சிந்தனைக்கு

சுதந்திர எழுச்சியின் உந்துதலால்தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 21 -02-2004

# உறுதியான ஆட்சி ஏற்படாது

"ஏப்பிரல் 02ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கப்போவதில்லை." என்ற ராய்ட்டர் செய்தி நிறுவனத்தின் கணிப்புக் குறித்து ஆச்சரியப்படுவதற்கோ, அதிர்ச்சி கொள்வதற்கோ எதுவுமே இல்லை.ஏனெனில், இது ஏற்கனவே பாமர மக்களினால்கூட அனுமானம் செய்யப்பட்டதொன்றாகவே இருந்தது.

இவ்வாறான அனுமானத்திற்கு இரண்டு முக்கியமான காரணிகள் இருந்தன. ஒன்று விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவ முறையின் கீழ் இடம்பெற்ற பெரும்பாலான தேர்தல்களில் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டதில்லை. தேர்தலின் பின் கூட்டணி அமைத்தே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

இரண்டாவதாகத் தற்போதைய சூழ்நிலையில் இரண்டு பிரதான கட்சிகளின் அரசியல் பலமும் ஏறத்தாள சம அளவிலானதாகவே உள்ளது. மக்கள் மத்தியில் எந்தவொரு கட்சியும் நம்பகத்தன்மை கொண்டவையாக இல்லை. அதேபோன்று இருகட்சிகளிடையேயும் பெரிய ளவிலான வேறுபாடுமில்லை. ஆனால், சனாதிபதி சந்திரிகா நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்டு ரணில் அரசாங்கத்தைக் கலைத்தமையால் மக்கள் மத்தியில் ஐ.தே.முன்னணிக்கு சற்றுக் கூடுதலான ஆதரவு மக்கள் மத்தியில் உருவாக வாய்ப்புண்டு. இதனால் சில ஆசனங்களை அது கூடுதலாகப் பெற வாய்ப்புண்டு.

ஆனால், எது எவ்வாறாயினும் இவற்றில் தனிப் பெரும்பான்மையுடன் எக்கட்சியும் வெற்றிபெறுதல் என்பது சாத்தியமற்றதொன்றே. ஆகையால் இம்முறையும் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் கூட்டணியே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவுண்டு.

இந்தவகையில் அறுதிப்பெரும்பான்மையைப் பெறுவதற்கே அரசியற்கட்சிகள் கூட்டுச்சேரவேண்டிய கட்டாயத்தில் இருக்கையில், அவை இலங்கையில் ஒரு ஸ்திரமான அரசை அமைப்பதென்பது எவ்வாறு சாத்தியமானதாகும்? இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய நடவடிக்கைகளை எவ்வாறு எடுக்கமுடியும். ஆகையினால் இலங்கையில் ஸ்திரமான ஆட்சி என்பது எவ்வாறு சாத்தியமானதாகும்.

அதாவது, சிறிலங்காவில் எதிர்வரும் ஏப்பிரல் 02ஆம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலானது இனப்பிரச்சினைத் தீர்விற்கு எந்தவகையிலும் உதவப் போவதில்லை. ஏனெனில் அறுதிப்பெரும்பான்மையோ அன்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ பெறக்கூடிய வாய்ப்புக்கள் தேர்தலின் மூலம்கிடைக்கப்பெறப் போவதில்லை.

இந்நிலையில் சிறிலங்கா அரசியலானது தேர்தலின் பின்னரும் இழுபறியுடன் கூடியதாகவே இருக்கும் எனத் துணிந்து கூறலாம். அதிலும் குறிப்பாக மீண்டும் ஐ.தே. முன்னணியே அதிகாரத்திற்கு வருமாயின் அதன் ஆட்சிக்காலம் நாட்கள் எண்ணப்படுவதாகவே இருக்கும். சில வேளைகளில் பொதுத்தேர்தல் முடிவில் பொ.ஐ.முன்னணி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினால் நிலையானதொரு அரசாங்கம் அமைக்கக்கூடியதான வாய்ப்பு உருவாகலாம். ஆயினும் அதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகுமா? என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில் அரசாங்கம் நிலையானதாக இருப்பினும்- இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றவிடயத்தில் சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி.கூட்டணிக்குள் இணக்கப்பாடு ஏற்படுதல் என்பது சாத்தியமானதா? என்பது கேள்விக்குரியதே. இனப்பிரச்சினை விவகாரம் முதன்மைப்படுத்தப்பட்டால் இரு கட்சிகளிடையேயும் பிளவுகூட ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் நிரம்பவே உண்டு.

அடுத்ததாக இவ்விருகட்சிகள் இணக்கப்பாட்டிற்கு வரினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது சாத்தியப்பாடான தொன்றாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகையினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது இந்நிலையில் கூட சாத்தியப்பாடானதாக இருக்கப்போவதில்லை. அத்தகையதொரு நிலையில் அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வின்றி ஸ்திரமானதொரு அரசுசாத்தியமாகுமா என்பதும் கேள்விக்குரியதே.

ஆகையினால் இலங்கையில் நடைபெறப்போகும் தேர்தலானது ஒரு ஸ்திரமான ஆட்சியை வழங்கப்போவதில்லை. அதுமட்டுமல்ல தற்போதைய சிறிலங்கா அரசின் அரசியல் யாப்பானது, இன்றும் எத்தகைய தேர்தல்களை நடத்தினால் கூட ஸ்திரமான ஆட்சிக்கு வழிவிடப்போவதில்லை. இதனால் சிறிலங்காவில் ஸ்திரமான ஆட்சி என்பது தற்போதைய அரசியல் யாப்பிலும் சிறிலங்காவின் அரசியல் கட்சிகளின் கொள்கையில் முழுஅளவிலான மாற்றங்கள் ஏற்படாத வரையிலும் என்றுமே சாத்தியமாகப்போவதில்லை.

# பிக்குகள் அரசியலில்ஈடுபடுவதால் பௌத்தமதம் இலங்கையில் அழியப்போகிறது

## - எச்சரிக்கிறார் பேராசிரியர் ஆரியரத்ன

(கொழும்பு)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை பௌத்த மக்களால் போற்றி வந்த பௌத்த மதம் இலங்கையில் அழியப் போகின்றதென சர்வோதயத் தலைவர் பேராசிரியர் ஆரியரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சில அரசியல் கட்சிகளுடன் இணைந்து பௌத்தபிக்குமார்கள அரசியலில் ஈடுபட்டு வருவதால் பௌத்த மதத்தை அழிக்கத் திட்டமிட்டுள்ளனர் எனவும் பௌத்த மதம் காப்பாற்றப் படவேண்டுமானால் பிக்குமார்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என பகிரங்க வேண்டுகோள் ஒன்றையும் அவர் விடுத்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜாதிக்க ஹெல உறுமய கட்சியில் போட்டியிடும் அனைவரும் பௌத்த பிக்குகள் என அக்கட்சி அரசியல்பீடம் அறிவித்துள்ளது.

ஆனபடியால் பௌத்த பிக்குமார் அனைவரும் ஜாதிக்க ஹெல உறுமய கட்சிக்கு வாக்களிக்க சம்மதம் தெரிவித்துள்ளனர். ஆகவே இவர்களின் வேட்பு மனுத்தாக்கல் இம்மாதம் 20ம் திகதி சமர்ப்பிக்கப்பட உள்ளதென கட்சியின் தலைமைப் பீடம் தெரிவித்துள்ளது.

பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடலாகாது. அரசியல் பௌத்த பிக்குகளுக்குரியது அல்ல பிக்குகள் தமது சமயக் கடமைகளோடு மட்டும் நின்றுவிடட்டும். அரசியல்வாதிகள் அரசியலில் ஈடுபடுவார்கள். 2500 ஆண்டுகளுக்கு மேலாக பௌத்த கோட்பாடு நிலைத்து வருகின்றது. பிக்குகள் தேர்தல்களில் மட்டத்திலும் சர்வதேசரீதியிலும் இக்கோட்பாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுவிடும்.

இவ்வாறு அமரபுர பீடத்தைச் சேர்ந்த மகாநாயக்க சங்கைக்குரிய இராஜகீய பண்டித வெலிகம ஞானரட்ணதேரர் சுயாதீன தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட பேட்டியில் வலியுறுத்தி கூறியுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் வேட்பாளராக 286 பிக்குகள் போட்டியிடுவார்கள் என வெளியான தகவலையடுத்து தேரர் பேட்டியளித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பகீரதப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வாக்குகளைப் பிக்குகள் பெற்று வெற்றி பெறலாம் எனினும் பௌத்த சமயத்திற்கு இவர்களால் ஒன்றும் செய்துவிட முடியாது. இப் போட்டியின் விளைவு இலங்கையில் பௌத்த சமயத்திற்கு அபகீர்த்தியையும் அவப் பெயரையும் ஊட்டுவதாக அமையும் என்றும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பிக்கு, பிக்குக்குரிய கடமையைச் செய்யட்டும். அரசியல் வாதிகள் அரசியலைக் கவனிக்கட்டும். இக்கடமைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் பாரதூரமான பேரிடர்கள் நேரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# தேர்தல் ஆணைக்குழு அதிகாரங்களை நடைமுறைப்படுத்த சட்ட அங்கீகாரமில்லை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான சட்ட அங்கீகாரம் வழங்கப்படவில்லையென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பின் 17வது திருத்தச் சட்டத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்றும் எவ்வாறாயினும் இம் முறை பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு பொதுநலவாய நாடுகள் ஐரோப்பிய ஆணைக்குழு ஆசியத் தேர்தல் அதிகாரிகள் சங்கம் ஆகியவற்றிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் கூறியுள்ளார். இதேவேளை உள்நாட்டில் உள்ள தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கும் அழைப்பு விடுக் கப்பட்டதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

# பாராளுமன்றம் திடீரெனக் கலைக்கப்பட்டதால் தேயிலைத் தொழிலுக்கு 160 மி.ரூபா நட்டம்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல

(கொழும்பு)

பாராளுமன்றம் திடீரென கலைக்கப்பட்டதால் தாய்லாந்துக்கும் இலங்கைக்குமிடையே செய்து கொள்ளப்படவிருந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பின்போடப்பட்டதால் தேயிலைத் தொழிலுக்கு 160 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழிலமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல கூறியுள்ளார்.

இந்த வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளினதும் பிரதமருக்கிடையே கடந்த ஒன்பதாம் திகதி கைச்சாத்திடப்படவிருந்தது. எனினும் கடந்த ஏழாம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தனது தாய்லாந்து விஜயத்தை ரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இலங்கையில் அரசியல் ஸ்திரநிலை ஏற்படும் வரை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதை தாமதப்படுத்த விரும்புவதாக தாய்லாந்து பிரதமர் கூறியுள்ளார்.

குறிப்பிட்ட இந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்படி இலங்கைத் தேயிலைக்கான தற்போதைய வரியை 55 சதவீதத்தால் குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் இலங்கையின் மாணிக்கக்கல் மற்றும் தைத்த ஆடைகள் ஆகியவற்றுக்கும் இது போன்ற சலுகைகள் வழங்கப்படவிருப்பதாகவும் பெருந்தோட்ட கைத்தொழிலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் பா.உறுப்பினர்கள் 42 பேர் ஓய்வூதியத்தை இழப்பார்கள்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் தெரிவு செய்யப்படாத பட்சத்தில் கடந்த பாராளுமன்றத்தில் உறுப்பினராய் இருந்த 42 பேர் தமக்கான ஓய்வூதியத்தைப் பெறும் வாய்ப்பை இழப்பார்கள் என்று கூறப் படுகின்றது.

இந்த நில்லமை பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேகச் செயலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஐந்து வருட பதவிக் காலத்தைப் பூர்த்திசெய்தால் மட்டுமே அவருக் கும் அவருடைய பிரத்தியேக செயலாளருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஆனால் இவர்களது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரே பாராளு மன்றம் சனாதிபதியால் கலைக் கப்பட்டுவிட்டது.

இந்நிலையில் மீண்டும் இவர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படாத பட்சத்தில் இவர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெறும் தகுதியை இழந்து விடுவார்கள் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

அத்துடன் இப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தினால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜீப் வண்டிகளும் வழங் கப்பட்டுள்ளன.

எனவே இவர்கள் மீண்டும் தெரிவு செய்யப்படாத பட்சத்தில் அந்த ஜீப் வண்டிகளுக்கான பணத்தினையும் தமது சொந்தப் பணத்தில் இருந்தே செலுத்த வேண்டிய நிலையும் ஏற்படும் என்றும் கூறப் படுகின்றது.

சென்ற பாராளுமன்றத் தேர்தலில் 42 பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிதாக பாராளுமன்றம் வந்திருந்தனர். இவர்களில் 16பேர் ஐக்கிய தேசிய முன்னணியையும், 12 பேர் பொதுசன ஐக்கிய முன்னணியையும், ஆறுபேர் ஜே.வி.பி.யையும், ஆறுபேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், இரண்டுபேர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் சேர்ந்தவர்கள்.


# காணாமல் போனோரின் மரபணு சோதனையை துரிதப்படுத்தித் தகவல்களை வெளியிடுக!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பில் மேற் கொள்ளப்படும் மரபணுப் பரி சோதனைகளைத் துரிதப் படுத்திக் குறித்த தகவல்களை வெளியிடுமாறு படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

1996-1997 ஆண்டு காலப் பகுதிகளில் குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்ட பல நூற்றுக் கணக்கானோர் கொல் லப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப் படுத்துவதற்காகச் செம்மணியிலும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களின் மரபணுக்களை உறவினர்களின் மரபணுக்களை ஒப்பிட்டுச் சோதனை செய்வதற்கு முதற்கட்ட நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

எனினும் மிகுதியாகவுள்ள ஏனைய சோதனை நடவடிக்கைகள் தாமதிக்கப்பட்டு வருவதனால் உடனடியாகவே தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு உண்மைத் தகவல்களை வெளியிடுமாறு மேற்படி சங்கம் வலியுறுத்தி வருகிறது. (33)



விடுதலைப்புலிகளின் அதிவேக உந்துருளி சிறப்பு அணியின் உந்துருளியுடனான அணிவகுப்பும் சாகச நிகழ்வுகளும்

# தேசிய விளையாட்டு விழாவில் உதை பந்தாட்டம் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

3வது தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் உதைபந்தாட்டப் போட்டி நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகின. முதற் போட்டி அம்பாறை கிளிநொச்சி அணிகளுக்கிடையே நடைபெற்றது. முன்னதாக வீரர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வைத்திய கலாநிதி யூடிரமேஸ் ஜெயக்குமார் ஆகியோருக்கு அறிமுகம் செய்துவைக்கப்பெற்றனர்.

இப்போட்டியில் 6-0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி அணி வெற்றி பெற்றது. சா.சந்திரவர்மன் இரு கோல்களையும், சூ.றெஜினோட், மு-க அன்ரன்,தி.சுதாகரன், செ.வே. ரமேஸ்காந் தலா ஒரு கோல்களையும் போட்டனர்.

அடுத்து நடைபெற்ற போட்டியில் மன்னார் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வவுனியா அணியை வெற்றி கொண்டது. மன்னார் அணியின் சார்பில் நா.அ.டெ.வின்சன், ஜே.டிக்கோனின் ஆகியோரும் வவுனியா அணியின் சார்பில் த.தவராஜாவும் கோல்களைப் போட்டனர்.

இரவு மின்னொளியில் நடைபெற்ற போட்டியில் திருமலை அணி முல்லை அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது. திருமலை அணி வீரர் ராஜா கோல் போட்டார். அடுத்து நடைபெற்ற மட்டு-யாழ் அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இப் போட்டிக்கு நடுவர்களாக ஜனாப் W.D பார்கூக், கு.முகுந்தன், பா.முகுந்தன், மு.வடிவேல், பாஸ்கரன், ந.யோகலிங்கம், அ.கி ஜெயசீலன், அமலன் ஆகியோர் கடமையாற்றினர்.

இதேவேளை இன்று காலை 8.30 மணிக்கு அம்பாறை, வவுனியா அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி உதயதாரகை மைதானத்திலும், காலை 8.30 மணிக்கு மத்திய மைதானத்தில் மன்னார்- வவுனியா அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டம் பெண்களுக்கான மட்டு- யாழ் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம், பெண்களுக்கான கிளி-அம்பாறை அணிகள் கலந்து கொள்ளும் கபடி ஆண்களுக்கான யாழ்-மன்னார் அணிகள் கலந்து கொள்ளும் தாச்சிப் போட்டியும், 9.30 மணிக்கு அம்பாறை- கிளி அணிகள் கலந்து கொள்ளும். பெண்களுக்கான கரப்பந்து கிளி-அமபாறை அணிகளுக்கான ஆண்கள் கலந்து கொள்ளும் கபடி, திருமலை- மட்டு அணிகளுக்கிடையிலான பெண்கள் கலந்து கொள்ளும் தாச்சி என்பன இடம் பெறவுள்ளன.

மாலை நிகழ்வாக திருமலை- யாழ்ப்பாணம், மட்டக்களப்பு- முல்லைத்தீவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியும் ஆண்களுக்கான மன்னார்- திருமலை அணிகளுக்கிடையிலான கரைப்பந்தாட்டப் போட்டியும், மன்னார்- வவுனியா அணிகளுக்கிடையிலான வலைப்பந்துப் போட்டியும் மின்னொளியில் நடைபெறவுள்ளன.

# முல்லை. நகரில் திங்களன்று மின்சார நிலையம் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் வரும் திங்கட்கிழமை மின்சார நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. 1990இல் இப்பகுதியை இராணுவம் ஆக்கிரமித்ததால் மின்சாரம் நிலையம் அழிக்கப்பட்டமை தெரிந்ததே.

கரைதுறைப்பற்று பிரதேச சபையால் வன்னிப் புனர்வாழ்வுக்கு துணை புரியும் அமைச்சின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட இம்மின்சார நிலையம் அன்று நண்பகல் 12.05க்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (20)

## அவசர கலந்துரையாடல்

கிளிநொச்சி வலய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். சகல பாடசாலைகளதும் அதிபர் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# ஜாதிக ஹெல உறுமய நேற்று யாழ். இல் வேட்பு மனு தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக மேலுமொரு சிங்களக்கட்சி வேட்பு மனுவை நேற்று மதியம் தாக்கல் செய்துள்ளது.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை ஜாதிக ஹெல உறுமய என்ற (சிகலமய உறுமயவின் புதியபெயர்) கட்சியே இவ்வாறு சங்குச்சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இக்கட்சியில் விதராந் தெனிய மெதானந்த தேரர் தலைமையிலான 12 பேர் கொண்ட குழுவினரின் பெயர்கள் வேட்பு மனுவில் வேட்பாளர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காரைநகர், ஊர்காவல்துறை ஆசிய கடல்படைதளங்களில் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீன் பிடி ரோலர்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர். (3[illegible])

## தேசியப்பட்டியல் அனுருத்தரத்வத்த

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தேசியப் பட்டியலில் இடம் பெறுவார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த முறை நடை பெற்ற பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் இவர் போட்டியிட்டமையும் உடத்தல வின வில் நடைபெற்ற தேர்தல் வன்முறையில் முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டமையும் தெரிந்ததே.

# சனாதிபதி அமைச்சுகளைப் பறித்தபின் எதிர்பார்த்த வற்றை நிறை வேற்றினாரா?

## -ஐ.தே.க. செயலாளர் சனாதிபதியிடம் கேள்வி.

(கொழும்பு)

ஐ.தே. கட்சியின் செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ சனாதிபதி சந்திரிகாவுக்கு பலகேள்வி கொத்துக்கள்அடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் சனாதிபதி முக்கிய பொறுப்புக்களை கையகப்படுத்திய பின்னர் அதன் மூலம் அவர் எதிர் பார்த்ததை நிறை வேற்றினாரா? நிறைவேற்றாததற்கு காரணம் என்ன? இவ்வாறான நிலையில் இது பிரதமரை அச்சுறுத்தும் நிகழ்வாகவே கருதப்பட வேண்டும். இதற்கு சனாதிபதி என்ன கூறுகிறார் என்ற கேள்வி வினவப்பட்டுள்ளது.

சனாதிபதி நாட்டின் பொறுப்பு வாய்ந்த தலைவர் என்ற ரீதியில் இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள கப்புக்கொட்டுவ, அவ்வாறு இல்லாது போனால் சனாதிபதி தனது பதவியில் இருந்து விலக வேண்டுமெனவும் அவர் அக்கடிதத்தில் கேட்டுள்ளார்.

இதேவேளை சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டுச் சேர்ந்துள்ள நிலையில் அமைச்சுப் பொறுப்புக்களை கையேற்றதும் பாராளுமன்றத்தைக் கலைத்ததும் தேர்தலை அடிப்படையாகக் கொண்டதுதான் என ஐ.தே.க. சந்தேகிப்பதாகவும் அதற்குரிய பதிலை சனாதிபதி அளிக்காது இருக்கிறார் எனவும் அவர் கூறினார்.

போர் நிறுத்த உடன்பாட்டைப் பொறுத்தமட்டில் சனாதிபதி உடன்பாடாக உள்ளார். மக்கள் விடுதலை முன்னணி போர் நிறுத்த உடன்பாடு ரத்து செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்து [illegible] அதிகாரப் பரவலாக்கலையும் முழுமையாக நிராகரித்துள்ள நிலையில் இலங்கையில் எவ்வாறான ஆட்சி ஏற்படும் என்ற நிலைப்பாட்டுக்கும் சனாதிபதி பதிலளிக்க வேண்டும் என கேட்டுள்ளார்.

இவ்வாறான கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது விட்டால் பதவியைத் துறக்க வேண்டும் என்ற வலியுறுத்தலையும்செனரத் கப்புக்கொட்டுவ விடுத்துள்ளார். (32)

### ஏ-9வீதி...

மனையி[illegible] வைக்கப்பட்டுள்ளது.

மேற்[illegible] இளைஞனின் சடலம் நேற்று இரவுவரை இனங்காணப்படாத நிலையில் அவரது பெயர் விபரங்கள் கிடைக்கவில்லை.(லோ)

### தமிழரின்..

புக்குத் தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என்று அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கட்சி வேறுபாடுகளைத் துறந்து ஒரு குடும்பம் என்ற உணர்வுடன் தேர்தலை எதிர் கொள்ள வேண்டும். "நாம் தமிழர்" அலை மாவட்டத்தில் வீச ஆரம்பித்துள்ளது. அந்த அலையை மாபெரும் வெற்றியாக தமிழ் மக்கள் மாற்ற வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும் திலக் கேட்டுக் கொண்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், க. துரைரெட்ணசிங்கம் மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈபி.ஆர். எல்எவ் சுரேஸ் அணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்திற்கு தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவன திருமலை மாவட்டப் பொறுப்பாளர் தர்மன் தலைமை வகித்தார். தமிழ் மக்களின் ஏகோபித்த ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக திருகோணமலை மாவட்டத்தின் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும். தமிழ் மக்களின் ஏகோபித்த தீர்மானத்தை சிங்கள அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் எதிர்வரும் தேர்தல் முடிவுகள் உறுதியாக வெளிப்படுத்த வேண்டும் என்று தர்மன் தலைமையுரையில் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் பேசுகையில், தமிழ் மக்கள் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டிய காலகட்டம் இது. விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்ட யோசனைக்கும் விடுதலைப்புலிகளோடு மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கும் தமிழ் வாக்காளர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். வடக்கு-கிழக்கில் நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பாக எதிர்வரும் பொதுத் தேர்தலை தமிழ் மக்கள் கருத வேண்டும் என்றும் துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார். (25)

## பெரு விளையாட்டில் கலந்துகொள்ள வந்த

# அம்பாறை பொலிஸ் அணி ஓமந்தைச் சாவடியில் தடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்திலிருந்து கிளிநொச்சியில் நடைபெறும் பெரு விளையாட்டில் கலந்து கொள்வதற்கென வந்த பொலிஸ் கரப்பந்தாட்ட அணி ஓமந்தை சாவடியில் வைத்து இராணுவத்தினரால் செல்லவிடாது தடுக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருகையில், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் இடமிருந்து அனுமதி பெற்று மேற்படி கரப்பந்தாட்ட விளையாட்டில் கலந்து கொள்ள வந்த பொழுதே இக்குழுவினர் இராணுவத்தினரால் செல்ல விடாது தடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிய பொழுது கண்காணிப்புக்குழுவினர் இராணுவத்தினரிடம் இது குறித்து வினவியபொழுது வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரே மேற்படி பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்செய்தி எழுதும் வரை மேற்படி குழுவினர் வன்னிக்கு வருகை தரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

### தனிச்..

மொழிச்சிக்கல் யாழ்.மாவட்டத் திணைக்களத்தில் மட்டுமன்றி திருகோணமலை,மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்ட தேர்தல் திணைக்களங்களிலும் நிலவுவதாக அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் சில அறிவுறுத்தல்களை தவறவிடக்கூடிய நிலையும் காணப்படுவதாக மேலும் சுட்டிக் காட்டப்படுகிறது. இதனால் மொழி பெயர்ப்பாளர்களை தேடி அலைய வேண்டிய சூழ்நிலையும் பணிகளில் காலதாமதமும் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)



# சாவு அறிவித்தல்

## திருமதி கனகவதி கனகசபாரட்ணம்

யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிடமாக வும், கிளிநொச்சி செல்வாநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகவதி கனகசபாரட்ணம் 18.02.2004 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகசபா ரட்ணம் (உதவிக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்ற கந்தையா நீலம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தவமணி அவர்களின் சகோதரியும், பிரபாலினி அதிபர் (கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்) கமலேந்திரன் (பிரான்ஸ்), கிருபாலினி(இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலராஜா கிளி/செஞ்சிலுவைச் சங்கம், சிவபாலினி ஆகியோரின் பெரியதாயாரும், திலக நாதன், இராசநந் தினி (பிரான்ஸ்), இராசநாயகம் (லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு மாமியாரும், கவியரசி, அகத்தியன் மாணவர்கள் கிளி/கனகபுரம் ம.வி.) மதியரசி ஆகியோரின் பாச மிகு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 22.02.2004 ஞாயிறு 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செல்வாநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-8797) தகவல்:- ஆ.திலகநாதன்



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.